# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு

## (2013/2014) January-February, 2018

## ED 3122 மாணவர் பொருத்தப்பாடும் ஆலோசனை வழங்கலும்

## (Students Adjustment and Counseling)

நேரம்: 02 மணித்தியாலங்கள்

பகுதி ஒன்றில் விரும்பிய இரு (02) வினாக்களுக்கும் பகுதி இரண்டில் விரும்பிய இரு (02) வினாவுக்குமாக மொத்தம் நான்கு (04) வினாக்களுக்கு விடை எழுதுக.

---

## பகுதி – I

1. அ) "பாடசாலைகளில் இடம் பெறுகின்ற கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் நோக்கங்களைத் திட்டமிட்டபடி அடைந்து கொள்வதற்கு மாணவர்களின் பொருத்தப்பாடு இன்றியமையாததாகும்." இந்த வகையில் மாணவர் பொருத்தப்பாட்டின் முக்கியத்துவம் பற்றி நீர் விளங்கிக்கொள்வதனை உதாரணங்கள் மூலம் விளக்குக? (10 புள்ளிகள்)

   ஆ) "மாணவர்களின் பொருத்தப்பாட்டைப் பொறுத்தே கல்விச் செயற்பாடுகள் வெற்றியளிக்கும்" என்பதற்கான நியாயங்களை முன்வைத்து விளக்குக? (10 புள்ளிகள்)

2. அ) "பாடசாலைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைகளைப் பின்பற்றாத மாணவர்கள் பிழையான சீராக்கம் பெற்ற மாணவர்களாகக் கொள்ளப்படுவர்" பிழையான சீராக்கம் பெற்ற மாணவர்களின் (Maladjusted Students) நடத்தைப் பண்புகளை இனம்கண்டு விளக்குக? (10 புள்ளிகள்)

   ஆ) பாடசாலை மாணவர்கள் பிழையான சீராக்கம் பெறுவதற்கான காரணங்களை ஆராய்க? (10 புள்ளிகள்)

3. அ) பாடசாலைகளில் வழங்கப்படும் தொழில் வழிகாட்டல் சேவையின் ஊடாக அடையப்படும் முக்கிய நோக்கங்களைக் குறிப்பிட்டு விளக்குக ? (10 புள்ளிகள்)

   ஆ) கின்ஸ்பேக்கின் (Ginsberg Theory ) தொழில் தேர்வு பற்றிய கொள்கையில் அனுபவத்தின் மூலம் தொழில் தெரிவு பருவம், யதார்த்தமான தொழில் தெரிவு செய்து கொள்ளும் பருவம் போன்றன பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க ? (5x2 = 10 புள்ளிகள்)

## பகுதி – II

4. 'பாடசாலையில் வழிகாட்டல் ஆலோசனை சேவையினை நிறுவும் போது தேவைக்கு பொருந்தக்கூடிய ஒழுங்கமைப்பு முறைகளிலும் திட்டங்களிலும் கவனம் செலுத்துத இன்றியமையாததாகும்.'

அ) ஒரு பாடசாலையின் நிலைமைக்குப் பொருத்தமான வழிகாட்டல் ஆலோசனை சேவையை நிறுவும் போது பின்பற்றப்படும் ஆலோசனைச்சேவை கட்டமைப்புக்க மூன்றினையும் ஆராய்க? (5x3 = 15 புள்ளிகள்

ஆ) "இன்றைய சமூகச் சூழலில் பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையின் தே அவசியமானதாகும்" இக் கூற்றினை நியாயப்படுத்துக? (15 புள்ளிகள்

5. அ) பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையில் பங்கு கொள்ளும் அதிப ஆசிரியர்கள், ஆலோசகர் போன்றோரின் பணிகள் தொடர்பாக ஆராய்க ?

(5x3 = 15 புள்ளிகள்

ஆ) பாடசாலை வழிகாட்டல் ஆலோசனை சேவையினால் ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் ஆகியோர் பெற்றுக் கொள்ளும் நன்மைகளைக் குறிப்பிட்டு விளக்குக?

(5x3 = 15 புள்ளிகள்

6. அ) "வழிகாட்டல் ஆலோசனை சேவையினை வழங்கும் பொருட்டு பிள்ளைகளை முழுமையாக விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்." இவ்வகையி ஆலோசனைச் சேவைக்காக தகவல்களைச் சேகரிக்கும் நுட்பங்களில் பேட்டி காண முறையினால் ஏற்படும் நன்மை மற்றும் தீமைகள் தொடர்பாக ஆராய்க? (15 புள்ளிகள்)

ஆ) ஒரு மாணவன் தொடர்பான பிரச்சினைகள் இனம்காணப்பட்டதும் காலதாமதமின்றி வழிகாட்டல் ஆலோசனையை ஆரம்பித்தல் அவசியமானதாகும். இந்த வகையி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பயன்படுத்தப்படும் விஞ்ஞான முறையிலமைந்த ஆ படிமுறைகளையும் எடுத்துரைக்குக? (15 புள்ளிகள்

மொத்தப்புள்ளிகள் - 100 (பகுதி I - 40, பகுதி II – 60)